## பாவங்**கள் போக்கவே**

பாவங்கள் போக்கவே சாபங்கள் தீர்க்கவே
பூலோகம் வந்தாரையா
மனிதரை மீட்கவே பரலோகம் திறக்கவே
சிலுவையை சுமந்தாரையா
கண்ணீரை துடைத்தாரையா
சந்தோஷம் தந்தாரையா

எந்தன் இயேசுவே (4)

தங்கத்தை கேட்கவில்லை வைரத்தை கேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாரையா
ஆஸ்தியை கேட்கவில்லை
அந்தஸ்தை கேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாரையா
நான் தேடி போகவில்லை
என்னைத் தேடி வந்தாரையா
எந்தன் இயேசுவே (4)

தாய் உன்னை மறந்தாலும்
தந்தை உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
நண்பர் உன்னை மறந்தாலும்
உற்றார் உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
கரம் பிடித்து நடத்திடுவார்
கன்மலைமேல் நிறுத்திடுவார்